அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 327(ii)

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 07
24 ஜூன் 1986.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவருக்கும்.

1986-இன் புதிய சம்பளங்கள்-சம்பள அளவுத் திட்டங்களின் உச்சக் கட்டத்தில் தேக்கத்தை உண்டு பண்ணும் வரையறைகளை நீக்குதல் - 1986-06-16ஆம் தேதிய 327(1) ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் திருத்தம்.

---

1986-06-16ஆம் தேதிய 327(i)ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையானது கீழே காட்டப்பட்டுள்ளவாறு திருத்தப்படுகிறது.

1. முதலாம் பந்தியை நீக்கிவிட்டு பின்வருவதைப் பதிலீடு செய்க.

   "இப்பந்தியின் கீழ் சம்பளங்களை மாற்றியமைத்த பின்னர் 31-12-1985 இல் பரிக்கமர்த்தப்பட்டிருந்த உத்தியோகத்தர்கள் யாவருக்கும் 01-01-1986இல் இருந்து செயற்படுமாறு 1986-இன் புதிய சம்பளங்களின் பேரில் ஒரு சம்பள ஏற்றம் வழங்கப்படுதல் வேண்டும். எனினும் 327-ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 5(ii)ஆம் பந்தியின் கீழ் தேங்கியமைக்கான அனுகூலத்தைப் பெற உரிமையுடைய உத்தியோகத்தர்களுக்கு இந்தச் சம்பள ஏற்றம் வழங்கப்படுதலாகாது.

2. சிங்களப் பிரதியில் 3-ஆம் பந்தியை நீக்கிவிட்டு பின்வருவதைப் பதிலீடு செய்க:-

   "1986 නව වැටුප්වලට පරිවර්තනය කිරීමෙන් අනතුරුව, නිලධාරියෙකුගේ වැටුප් වර්ධකයක වටිනාකම පෙරට වඩා අඩු නම්, එබඳු නිලධාරියෙකුට එකී වෙනස, පාඩුව මැකියන තෙක් ගෙවිය යුතුය. 1986 නව වැටුප්වල වැටුප් වර්ධකයක වටිනාකමට වඩා වැඩි වැටුප් වර්ධක වටිනාකමක් අනාගත දිනයකදී හිමි නිලධාරියෙකුටද මෙය අදාළ විය යුතුය."

ஒப்பம்: டி. பி. ஜ. ப். எஸ். சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.